திரு. இராம. அரங்கண்ணல்: சென்னை மாநகரத்திலே போஸ்ட் மார்ட்டம் செய்கிற கேஸ்களை ஒரு நாள் கழித்து செய்யக்கூடிய நிலைமை இருக்கிறது. இதனால் இறந்துபோனவர்களுடைய பிரேதங்களைப் பெறுவதிலே ஏழை மக்கள் மிகவும் கஷ்டப்படு கிறார்கள். ஆகவே, எப்படியும் அன்றைய தினம் மாலை 6 மணிக் குள்ளாக கொடுத்துவிடவேண்டுமென்று உத்தரவிடப்படுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இறந்துபோகிறவர்கள் காலை 10 மணிக்குள் இறந்துபோவதாக ஒப்பந்தம் செய்துகொடுப் பார்களானால் மாலை 6 மணிக்குள் அவர்களுடைய பிரேதங்களைக் கொடுக்கலாம். ஆனால், இறந்துபோனவர்கள் மாலை 4 மணிக்கு இறந்துவிட்டால் மாலை 6 மணிக்குள்ளாகவே கொடுக்கக்கூடிய— காலையிலே பணியாற்றிய டாக்டர்கள் மாலையிலும் பணியாற்றக் கூடிய நிலைமை இல்லை—வசதி இல்லை. ஒரே மருத்துவ மனையிலே செய்வதற்குப் பதிலாக ஸ்டான்லி மருத்துவமனையிலேயும், மற்ற மருத்துவமனைகளிலேயும் செய்ய வேண்டுமென்ற கருத்து ஏற்றுக் கொள்ளப்பட்டு வருகிறது. அது நடைமுறைக்கு வருவதுபற்றி நான் பரிசீலனை செய்யத் தயாராக இருக்கிறேன்.

கிராம மருத்துவமனை மருத்துவர்கள் முறையீடு

* 113 **வினா—டாக்டர் எச். வி. ஹாண்டே:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு கிராம மருத்துவமனை மருத்துவர்கள் சங்கத்தின் சார்பில் 4—4—1974 அன்று கோரிக்கைகள் அடங்கிய மனு ஒன்று மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர் களுக்கு வந்துள்ளதா ?

(இ) ஆமெனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) ஆம்.

(இ) அரசின் பரிசீலனையின் பலனாக அண்மையிலே கிராம மருத்துவர்களுடைய ஊதியத்தை மானியமாக வழங்குகிற முறையிலே உயர்த்தி வழங்கப்பட்டு இருக்கிறது. ஏற்கனவே

1975 அக்டோபர் 29]

அளித்து வந்த தொகை எவ்வளவோ அதில் 50 சதவிகிதம் இப்போது அதிகமாக அளிக்கப்படுகிறது. பி.ஐ.எம். முதலான டாக்டர்களுக்கு ஏற்கனவே 150 ரூபாய் அரசும், 75 ரூபாய் தனிப்பட்ட ஒன்றியமும் கொடுத்துவந்தது. இப்போது 200-ம், 100-ம் ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. எல்.ஐ.எம். டாக்டர்களுக்கு மொத்தம் 100 ம், 50-ம் ஆக வழங்கப்பட்டது. இப்போது 150-ம், 75-ம் ஆக வழங்கப்பட்டு இருக்கிறது. 7—10—1975-இல் மகப்பேறு உதவியாளர்களுக்கு 105-ம், 52½-ம் ஆக இப்போது உயர்த்தப்பட்டிருக்கிறது. இவைகளையெல்லாம் இயக்குநர் மூலமாக ஒன்றியத்தின் ஆணையர்களுக்குத் தெரிவித்து அவர்கள் நடைமுறைப்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

•கிராமப்புறங்களில் சித்தவைத்திய நிலையங்கள்

* 114 **வினா—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊராட்சி மன்றங்கள் கிராமப்புறங்களில் சித்த வைத்திய நிலையங்களை நடத்திட அரசு வலியுறுத்தியுள்ளதா?

(இ) ஆமெனில், அரசு ஏதேனும் உதவி அளித்து வருகின்றதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) இல்லை.

(இ) ஆனால், அரசு சில அடிப்படைகளில் அந்த மருத்துவ மனைகளைத் துவங்குவதற்கு உதவி அளித்து வருகிறது.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, அலோபதி முறையிலே மருத்துவ மனைகள் ஆங்காங்கே நிறுவுவதற்கு மிகுந்த அதிகமான செலவாகிற காரணத்தினாலே குறைந்த பட்சம் ஊராட்சி மன்றங்கள் இருக்கின்ற பகுதிகளிலாவது 4, 5 ஊராட்சி மன்றங்களை இணைத்து ஒரு மையம் ஏற்படுத்தி அங்கே சித்த வைத்திய மருத்துவமனையை ஏற்படுத்த வேண்டுமென்பதை அரசு ஒரு கொள்கையாக ஏற்று பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.